**செய்தி வெளியீடு எண்: 422** **நாள் : 09.08.2014**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 8.8.2014 அன்று தலைமைச் செயலகத்தில், வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், தக்கோலம் ஆற்றில் மணல் கடத்துவதைத் தடுக்கும் பணி செய்த போது தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்த தக்கோலம் காவல் நிலைய தலைமைக் காவலர் திரு கனகராஜ் அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள்.

வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், தக்கோலம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு கனகராஜ் அவர்கள் கடந்த 20.7.2014 அன்று தக்கோலம் ஆற்றில் மணல் கடத்துவதை தடுக்கச் சென்றபோது, அங்கு மணல் அள்ளிக் கொண்டிருந்த தக்கோலம் பேரூராட்சி 6–வது வார்டு தே.மு.தி.க. கவுன்சிலர் திருமதி செண்பகவல்லி என்பவரின் மகன் டிராக்டர் ஓட்டுநர் திரு சுரேஷ் என்பவரை டிராக்டரிலிருந்து கீழே இறக்க முற்பட்டார். அப்போது டிராக்டர் ஓட்டுநர் திரு சுரேஷ், தலைமைக் காவலர் திரு கனகராஜ் அவர்களை கீழே தள்ளி, டிராக்டரை இயக்கிய போது, திரு கனகராஜ் அவர்கள் டிராக்டரில் சிக்கி பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அந்த செய்தியை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.7.2014 அன்று தலைமைக் காவலர் திரு கனகராஜ் அவர்களின் அகால மரணத்தால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தினருக்கும் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்ததோடு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 10 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, மறைந்த தலைமைக் காவலர் திரு கனகராஜ் அவர்களின் குடும்பத்தினருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கி ஆறுதல் கூறினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து காசோலையைப் பெற்றுக் கொண்ட தலைமைக் காவலர் திரு கனகராஜ் அவர்களின் குடும்பத்தினர் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார்கள்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள்: 9.8.2014